# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

8073070

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District / மாவட்டம் : திருவண்ணாமலை PS / காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை Year / ஆண்டு: 2018 FIR No. / மு.த.அ. எண்: 09/2018 Date / நாள்: 10.10.2018

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 08/10/2018 Date to நாள் வரை : –
   Time Period : நேர அளவு Time from நேரம் முதல் : மாலை சுமார் 4 மணி Time to நேரம் வரை : –
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10/10/2018 Time நேரம் : 0700 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக நேரடியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 35 கி.மீ மேற்கு திசை
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வட்டாட்சியர் அலுவலகம், செங்கம் திருவண்ணாமலை மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. ப. கோபால் [illegible] (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ம. பழனி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி 105, மெயின் ரோடு, நயம்பாடி கிராமம் [illegible] போஸ்ட், செங்கம் தாலுக்கா திருவண்ணாமலை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி ரேணுகா,
   வட்டாட்சியர்
   வட்டாட்சியர் அலுவலகம்
   செங்கம், திருவண்ணாமலை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் –

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10/10/2018

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

10/10/18

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ............................
Rank: நிலை ....................No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து அனுப்பப்படுகிறது:- திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் 10.10.2018-ம் தேதி காலை 06.15 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்களின் மேல் வரைவுடன் கிடைக்கப்பெற்ற தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு பின்வருமாறு: விடுநர் ப.கோபாலகிருஷ்ணன், த/பெ ம.பழனி, 105, மெயின் ரோடு, நயம்பாடி கிராமம், கல்லரைப்பாடி போஸ்டு, செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை. 606 702 செல்: 9865383827, பெறுநர், உயர்திரு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம், திருவண்ணாமலை. அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் என் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வசித்து வருகின்றேன். நான் +2 வரை படித்து உள்ளேன். நயம்பாடி கிராமத்தில் எங்களுக்கு சொந்தமாக சுமார் 4½ ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. அதில் நான் விவசாயம் செய்து பிழைத்து வருகின்றேன். கடந்த 10 வருடங்களுக்கு முன்பாக எனது மனைவி திருமதி.சாரதா-வின் உடன்பிறந்த தம்பி செளந்தர் என்பவருக்கும் வெண்ணிலா என்பவருக்கும் திருமணமாகி இரண்டு ஆண் பிள்ளைகளும் ஒரு பெண் பிள்ளையும் உள்ளார்கள். கடந்த 2.11.2017 ஆம் தேதி உடல்நிலை சரியில்லாத காரணத்தால் எனது மைத்துனர் செளந்தர் என்பவர் இறந்துவிட்டார். செளந்தரின் மனைவி வெண்ணிலா 10 ஆம் வகுப்பு வரை படித்து பெயில் ஆகிவிட்டார். தற்பொழுது கூலி வேலை செய்து குழந்தைகளை காப்பாற்றி வருகின்றார். செளந்தர் இறந்த பிறகு அவருடைய குடும்பத்திற்கு தேவையான உதவிகளை நானும் எனது மனைவியும் செய்து வருகின்றோம். மேலும் திருமதி.வெண்ணிலா என்பவரின் வாழ்வாதாரத்திற்காக அரசால் வழங்கப்படும் சலுகைகளை பெறுவதற்காக ஆதரவற்ற விதவை சான்றிதழ் பெற வேண்டி கடந்த 12.03.2018 தேதி மாவட்ட ஆட்சித்தலைவர் குறைதீர்வு நாள் அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் நானும் எனது மைத்துனர் மனைவி திருமதி.வெண்ணிலாவும் மனு கொடுத்தோம். அதன்பின்னர் சுமார் 15 நாட்கள் கழித்து நயம்பாடி கிராம நிர்வாக அலுவலர் திரு.கிருஷ்ணன் அவர்கள் விசாரணை மேற்கொண்டு அவருடைய அறிக்கையை எறையூர் பிர்கா வருவாய் ஆய்வாளருக்கு அனுப்பி அவரும் தனது அறிக்கையை செங்கம் வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பி கடந்த நான்கு மாதங்களாக செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடவடிக்கை எடுக்கப்படாமல் ஏதோ காரணத்திற்காக நிலுவையில் இருந்து வருகின்றது. செங்கம் வட்டாட்சியர் திருமதி.ரேணுகா அவர்களை வட்டாட்சியர் அலுவலகத்தில் நான் பலமுறை நேரில் சென்று சந்தித்து திருமதி.வெண்ணிலா என்பவருடைய குடும்ப சூழ்நிலைகளை எடுத்து கூறி ஆதரவற்ற விதவை சான்று வழங்க உதவுமாறு கேட்டு இருக்கின்றேன். நான் கேட்கும் பொழுது

எல்லாம் உடனே செய்து விடுகின்றேன் என கூறுவார். ஆனால் ஏதோ காரணத்திற்காக ஆதரவற்ற விதவை சான்று வழங்குவதற்கு பரிந்துரை செய்ய இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. நான் கடந்த 8.10.2018 ஆம் தேதி மாலை சுமார் 4 மணியளவில் செங்கம் வட்டாட்சியர் அலுவலகம் சென்று செங்கம் வட்டாட்சியர் திருமதி.ரேணுகா அவர்களை நேரில் சந்தித்து நிலுவையில் உள்ள எனது மைத்துனரின் மனைவி திருமதி.வெண்ணிலா என்பவரின் ஆதரவற்ற விதவை சான்று சம்மந்தமாக கேட்ட பொழுது அவர் என்னிடம் ரூ.2000/- கொடுத்தால் வேலையை உடனே முடித்து கொடுத்துவிடுகின்றேன் என கூறினார். நான் அவரிடம் திருமதி.வெண்ணிலா அவர்கள் குடும்ப சூழ்நிலையை எடுத்து கூறியும் செங்கம் வட்டாட்சியர் என்னிடம் ரூ.2000/- கொடுத்தால் மட்டுமே ஆதரவற்ற விதவை சான்று வழங்க பரிந்துரை செய்யப்படும் என உறுதியாக கூறிவிட்டார். எனக்கு அவ்வாறு பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால் திருமதி.வெண்ணிலா என்பவருக்கு ஆதரவற்ற விதவை சான்று வழங்க ரூ.2000/- என்னிடம் இலஞ்சமாக கேட்ட செங்கம் வட்டாட்சியர் திருமதி.ரேணுகா என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் இன்று 10.10.2018 தேதிக்கு புகார் மனு அளிக்கின்றேன். இப்படிக்கு தங்கள் உண்மையுள்ள SD/XXX ப.கோபாலகிருஷ்ணன். 10/10/2018.

Inspector Tr. R.Arul Prasad

Please receive the complaint. Discreetly verify the antecedents of the accused and register a case and take up for investigation. Sd/-XXXXXX 10/10/18 (V.SARAVANAKUMAR) DSP, V&AC, Tiruvannamalai.

Sir,

Received the complaint on 10/10/18 at 06.15 hrs and a quick verification on the general reputation of the accused had made and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also checked and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 10.10.2018 at 07.00 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.09/18, u/s. 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to Hon'ble CJM and Special Judge, Tiruvannamalai and sent the copies to the officers concerned. Sd/-xxxxxx இரா.அருள்பிரசாத், கா.ஆ, 10/10/18 காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை.

10/10/18

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Thiruvannamalai